மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விளக்கம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம், என்ன குறை என்று சொல்லுங்கள், உங்கள் அனுபவத்தைச் சொன்னால் நேரம் இருக்காது.

திரு. கே. என். குமாரசாமி : @

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் கேள்வியை நான் அனுமதிக்கவில்லை.

திரு. கே. என். குமாரசாமி: நான் என்னுடைய கேள்வியில் இருக்கிற டிபிகல்டியை சொல்கிறேன். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது என்ன டிமாண்டா, இருக்கிற டிபிகல்டியைச் சொல்ல? கேள்வியைப் போடுங்கள்.

திரு. கே. என். குமாரசாமி: கலப்படம் சம்பந்தமாக சானிடேரி இன்ஸ்பெக்டர்களும், கூட இருக்கிற அதிகாரிகளும் சாம்பிள் சரியான முறையிலே எடுப்பதில்லை. இதனால் அவர்கள்மேல் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஆகவே சரியான முறையிலே சாம்பிள் எடுத்து நடவடிக்கை எடுக்கச் செய்ய அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாண்புமிகு அங்கத்தினர் எந்த இடத்திலே இப்படி இக்கட்டான நிலைமை இருக்கிறது என்ற விவரத்தைச் சொன்னால் பரிசீலனை செய்யச் சொல்லலாம்.

குடிநீர் வழங்கு திட்டங்கள்

*309 வினா—திரு. என். கிட்டப்பா:

திரு. என். கே. பழனிசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகருக்கு குடிநீர் வழங்கும் திட்டம் ஐ. நா. சபை உதவியுடன் செயல்பட ஏற்பாடு செய்யவேண்டுமென மத்திய அரசை, மாநில அரசு அண்மையில் வலியுறுத்தி உள்ளதா?

(இ) ஆம் எனில், விபரம் என்ன?

@மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.

1975 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) தமிழக அரசு மத்திய அரசின் அனுமதியுடன் "ஐக்கிய நாடு முன்னேற்ற திட்டத்தின்" கீழ், சென்னை நகர் மற்றும் சென்னை புறநகர் வளர்ச்சி திட்டத்திற்கான குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் போன்ற திட்டத்திற்குத் தேவையான முன்னிலை முதலீடு ஆய்வு (Pre-investment study) செய்யுமாறு கோரியது. இதற்கு ரூ. 2.00 கோடி ஐக்கிய நாடு முன்னேற்றத் திட்டத்தின் கீழ் உதவி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மாநில அரசு 1975-76, 1976-77 மற்றும் 1977-78 ஆகிய மூன்று ஆண்டுகளில் அதற்காக ரூ. 43.6 லட்சம் செலவு செய்யவேண்டி உள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான அனுமதி இன்னமும் ஐக்கிய நாட்டு சபையிலிருந்தும், மத்திய அரசிடமிருந்தும் கிடைக்கப் பெறவில்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, சென்னை நகருக்குக் குடிநீர் வழங்க பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்ட வீராணம் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த ஐ. நா. சபை உதவி ஏதேனும் அளித்துள்ளதா? அதைப்போலவே மத்திய அரசு ஏதேனும் உதவி அளித்துள்ளதா என்பதையும், வீராணம் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்தத் திட்டம் வீராணம் திட்டத்தோடு நெருக்கமான தொடர்புடையது அல்ல. வீராணம் திட்டம் நிறைவேறி அதன் தண்ணீர் கிடைத்தாலும்கூட 15 ஆண்டுகள் கழித்து மறுபடியும் புதிய தேவை ஏற்படுகிறது. ஏனென்றால் ஆந்திராவிலிருந்து கிருஷ்ணா நீரைக் கொண்டு வரும் திட்டம் நீண்டகாலமாகக் கருதப் பட்டாலும் பல்வேறு நிலைமைகளாலும் வடிவு எடுக்காததால் வேறுவகையான சாத்தியக் கூறுகள் ஆராயப் பட்டு சென்னை நகர் பெருநகர் என்ற வளர்ச்சி ஏற்படும்பொழுது அடிப்படையை உருவாக்க வேண்டுமென்று பேசப்படுகிறது. வீராணம் திட்டத்திற்கு மத்திய அரசு தன்னுடைய வெளிநாட்டுச் செலாவணி 'கண்டென்ட் ஆஃப் ஃபாரின் எக்சேஞ்ச்' என்ற அந்த அளவிற்கு ஏற்றுக் கொண்டிருப்பதாக என்னுடைய நினைவிலிருந்து தெரிவிக்க விரும்புகிறேன்.

[1975 நவம்பர் 12

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இது வீராணம் திட்டமும் அல்ல, கிருஷ்ணா நதி திட்டமும் அல்ல என்றால் வேறு எங்கேயிருந்து தண்ணீரைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். திருவான்மியூர் போன்ற பலயிடங்களில் கிடைத்திருக்கிறது என்ற தகவல் இருக்கிறதா ? இல்லையென்றால் இரண்டு கோடி ரூபாயை வாங்கி என்ன செய்யப் போகிறார்கள் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, கண்டு பிடிக்கிற வேலைக்குத்தான் அவர்கள் வருகிறார்கள். அது எனக்குத் தெரிந்திருந்தால் அவர்களைக் கூப்பிட மாட்டேன்.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவரவர்களே, சென்னை மாநகரத்திற்குத் தண்ணீர் வழங்கும் இந்தத் திட்டம் கார்ப்பரேஷனால் பரிசீலிக்கப்படுகிறதா? அல்லது மெட்ராஸ் மெட்ரோபாலிடன் டெவலெப்மென்ட் அதாரிட்டியினால் பரிசீலிக்கப்படுகிறதா ? அல்லது வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் ஆகிய இவைகளினால் பரிசீலிக்கப்படுகிறதா என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இதை நினைத்தவர்களெல்லாம் பரிசீலிக்க முடியாது. சென்னை நகரத்தின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றும் முறையில் மாநகராட்சி மன்றம் பல கடமைகளைச் செய்து வருகிறது. நீண்ட காலத் தேவைக்கேற்ற முறையில் 'மெட்ராஸ் மெட்ரோபாலிடன் டெவலெப்மெண்ட் அதாரிட்டி' மூலம் இந்தக் காரியங்கள் பிற துறைகளையும் கலந்து கொண்டு நடைபெறுகின்றன.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, ஆந்திராவிலிருந்து கிருஷ்ணா தண்ணீர் நமக்குக் கிடைக்க வேண்டுமென்று கூறும்பொழுது மத்திய அரசு சோமசீலா பிராஜக்ட் சம்பந்தமாக ஒரு நிர்ப்பந்தம் போட்டிருந்தார்கள். அதை இந்த அரசு பரிசீலித்து அந்த நிபந்தனை விலக்கப்பட்டிருக்கிறதா? அல்லது மத்திய அரசு இந்த சோமசீலா பிராஜக்ட் பற்றி கிருஷ்ணா நதியிலிருந்து கொண்டு வரும் தண்ணீருக்கு என்ன செய்ய வேண்டுமென்ற கருத்துரைகளைக் கூறியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அதைப் பற்றிய முழு விவரங்களை நான் இந்த நேரத்தில் தர முடியாத வகை இருக்கிறேன். தனிக்கேள்வி இருக்குமானால் விவரங்கள்

1975 நவம்பர் 12]

முழுவதையும் தர முடியும். ஆனால் மாநில அரசு திரும்பத் திரும்ப மத்திய அரசை, ஆந்திரப் பகுதியிலிருந்து கிடைக்க வேண்டிய தண்ணீருக்குத் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும், ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறது. அண்மையிலேகூட வலியுறுத்திக் கேட்டிருக்கிறோம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து பெறுகின்ற இந்தக் கடன் தொகை தண்ணீர் எங்கே இருக்கிறது என்று கண்டுபிடிக்க மட்டும்தானா? அல்லது விநியோகம் செய்கின்ற செலவுகளுக்கும் சேர்த்தா? ஏற்கனவே போடப்பட்டிருக்கும் திட்டங்கள் பூர்த்தியாகி சென்னை நகரில் குடிதண்ணீர்ப் பஞ்சம் இல்லை என்ற நிலை எந்த ஆண்டில் ஏற்படும் என்ற உறுதியைத் தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, சென்னை நகரம் வளர்கின்ற நகரம். அந்த வளர்ச்சி வேகம் தொடர்ந்து அதிகமாகி, 'ஆக்சலரேட்டட் குரோத்' இருக்கும் என்றுதான் எதிர்பார்க்கப்படுகிறது. சென்னை நகரத்தைச் சுற்றி 'சாட்டிலைட் டவுன்' போன்றவைகள் அமைக்கப்பட்டாலும்கூட வேகமாக வளருகின்ற அந்தப் பகுதிகளுக்கும் தேவைப்படும்.

ஆகவே, சென்னை நகர 400 சதுரமைல் பரப்பளவுக்கு அதிகத் தண்ணீர் தேவைப்படும். மிகவும் வேகமாக வளரும் வசதியும் இருக்கிறது. எனவே, நாம் ஏற்கனவே போட்ட திட்டங்கள் பலனுக்கு வந்தாலும் மறுபடியும் வளர்ச்சிக்கான தண்ணீர் தேவை. ஆகவே, உதவித் தொகை என்று கருதப்படுகிறது. அவர்கள் நம்முடைய திட்டங்கள், ஆலோசனைகள் முதலிய இவைகளைப் பார்த்து நல்லமுறையிலே 'மெட்ராஸ் மெட்ரோபாலிடன் டெவலப்மென்ட் அதாரிட்டி' மூலமாகத் தகுந்த அடிப்படை ஆராயப்பட வழிகோலப்பட்டிருக்கிறது. ஆகவே முன்னோடித் திட்டம் என்ற வகையில் 'பிரீ-இன்வெஸ்ட்மென்ட் ஸ்டடி'க்கு இந்த உதவியை அவர்கள் கொடுத்து, நாமும் அரைக் கோடி ரூபாய் செலவிட்டு அவர்கள் சொல்லும் பரிசீலனை முறைகளைக் கையாண்டு முடிவெடுக்க வேண்டிய காலம் வரும்.